# வேண்டுதல் ஜெபம்

இஸ்ராயேலின் தேவனாகிய கடவுளும்/ யாக்கோபின் கடவுளும்/ பரலோகத்தின் தேவனுமாகிய கடவுளே. நான் செய்த பாவங்களாலும்/ குற்றங்களாலும்/ பல நீதிமான்களுடைய ஆத்துமாக்கள்/ இக்கட்டில் மாட்டாதபடிக்கு/ எங்கள் பாவகுற்றங்களையும்/ குறைகளையும்/ கழுவியருளும். நான் வெள்ளைப்பாலையும் மஞ்சள்ப்பாலையும் சிகப்புப் பாலையும் குடித்தேன். எனக்கு முன்னால் ஏழு திரிகள் எரிந்தன. நான் அவைகளை நாவினால் நக்கினேன். அந்த ஏழு திரிகளிலிருந்து வந்த ஒளிகள்/ என் இருதயத்தைத் தின்றன. அதற்குள் சாவு என்னும் அழிவை நான் சுவைத்தேன். அந்த ஏட்டுச்சுருள் என்னை எப்பொழுதும் விழுங்கிக் கொண்டிருக்கிறது. என் ஆத்துமாவோ பதைபதைத்துக் கொண்டிருக்கிறது. இரவெல்லாம் தூங்க முடியாத விழிப்பும்/ மனிதனை இப்பூமியில் வாட்டுகிறது. மனதும்/ மனதளவிலும்/ மனிதனுடைய இருதயம் எப்பொழுதும் சங்கடமாயிருக்கின்றன. சமாதானத்தைத் தேடாதபடிக்கு அலைமோதுகிற ஆவிகள்/ உலகில் அலைமோதிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும்/ ஏழு வகையான கடல்களுக்குள்/ அமுக்கப்படும் பொழுது/ ஒன்பது வகையான கிரகங்கள்/ அவனை விட்டு விலக்கபடுகின்றன. ஒன்பது கற்களை நாவினால் நக்கியதாலும்/ ஒன்பது வகையான ஒளிச்சுடர்கள்/ மனிதனுடைய இருதயத்திலே சுடர்வதாலும்/ ஒன்பது ஓட்டைகள் அவனுக்குள்ளே நிலை பெறுவதாலும்/ ஒரு மனிதனும் நிலை பெறாதபடிக்கு/ இந்த ஒன்பது ஓட்டைகளில்/ ஏதேனும் ஏழு ஓட்டைகள் அடைக்கப்படும் பொழுது/ அவனுடைய இருதயங்கள் அடைக்கப்படுகின்றன. பாதாளங்களும் அடைக்கப்படுகிறது. பரிசுத்தத் தேவனுடைய கரங்களோ/ ஓங்கி வல்லமை கொண்டு எழுகிறது. அப்பொழுது நான் புடை சூழ நிற்க முடியாமல் துவண்டுபோகிறேன். என்

AMS Ministries

ஆத்துமாவை காப்பவர் யார்? என் இருதயத்திற்கு குறை கூற/ என் ஆத்துமா அப்பொழுதும் குறை கூறிக்கொண்டிருக்குமோ? நான் புலம்பும் புலம்பலெல்லாம் என் ஆண்டவர் கேட்பாரோ? என் வேண்டுதல் எல்லாம் அவரிடத்தில் கேட்க முடியாத ஓர் இடத்திற்கு நான் தள்ளப்படுவேன். என் கைகளிலே விளக்கிருந்தும் எண்ணை இல்லாதவளாய் இருப்பேன். நான் எண்ணையிருந்தும் விளக்கில்லாதவளாய் இருப்பேன். ஒன்றுக்கும் உதவாத குப்பைகளை நான் சுமந்துத் திரிவேன். ஆனால் என் ஆத்துமமும் என் சரீரமும் ஒன்றிணைக்கப்படுமோ? என் பெலகீனம் என்னை விட்டு பிரிக்கப்படுமோ?/ என் பலவீனத்தினால் என் குறைகள் நீக்கப்படுமோ? என் தேவனே என்மேல் இரக்கமாயிரும். என் ஆண்டவரே! என்னுடைய இருதயத்தில் இருக்கிற வலிகளை சுகமாக்கும். என் ஆன்ம பெலத்தை எனக்குத் தாரும். நானோ பாவி/ ஆண்டவரே நான் பாவத்திலும் பாவம் செய்தேன். உம் பரிசுத்த ஸ்தலத்தை இழந்தேன். என் சிந்தனையாளும்/ என்னுடைய சொல்லாலும்/ என்னுடைய செயலினாலும்/ நான்/ பல தடவை பாவங்களை புரிந்திருக்கிறேன். இந்த பாவங்களை எல்லாம்/ உம்முடைய திருஇரத்தத்தால்/ என்னைக் கழுவி/ பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று மன்றாடுகிறேன்.

-ஆமென்.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் என்றென்றும் மறவாதே.

- ஆமென்.

AMS Ministries